

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ.வின் மூத்த சகோதரர் மறைந்த க.சண்முகம் உடலுக்கு அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, ஏ.சி. வில்வநாதன், மு.பே. கிரி உள்ளிட்ட கழக முன்னோடிகள் இருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர், திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட BLA2, BDA, BYO ஆகிய 1125 நிர்வாகிகளுக்கு புத்தாடைகள். இனிப்பு. காரம் மற்றும் பரிசுத்தொகையை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழங்கினார். இவ்விழாவில் கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம். நாதன், பரிதி இளம் சுருதி, கோ.ஏகப்பன், பி.எம்.யாழினி, என்.கிருஷ்ணமூர்த்தி, வி.சுதாகர், சொ.வேலு எம்.சி மற்றும் BLA2, BDA,BYO செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

### போதிய அளவு தளவாடப் பொருட்கள் குடியிருப்பில் உள்ள

# மின்னகம் - மின் நுகர்வோர் சேவை மையத்தில் ஆய்வு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் - அதிகாரிகளுடன் மேற்கொண்டார்!

சென்னை, அக்.22-

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 19.10.2025 அன்று தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் "மின்னகம் - மின்நுகர்வோர் சேவை மையம்" மற்றும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தில் மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், அவர்களுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டு, வடகிழக்கு பருவமழை எதிர்கொள்ள எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தயார்நிலை மற்றும் பராமரிப்பு பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

முதலாவதாக, சென்னை இராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள மைலாப்பூர் பண்டகசாலையில் தளவாட பொருட்களின் கையிருப்பு நிலை குறித்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வடகிழக்கு பருவமழையின் போது பொதுமக்கள் மின் தடங்கல் மற்றும் மின்சார பாதுகாப்பு சம்பந்தமான புகார்களை எவ்விதத் தொய்வுமின்றி தெரிவித்திட வழிவகை செய்யும் விதமாக, மின்னகத்தில் கூடுதலாக 10 நபர்கள் பணிய மர்த்தப்பட்டுள்ளனர். இதனால், பொதுமக்கள் மின்சாரம் குறித்து புகார் அளிக்கும் போது, அழைப்பு களுக்காக நீண்ட நேரம் காத்திருப்பது தவிர்க்கப்படும். அமைச்சர் அவர்கள், மின்னகத்தில் பெறப்படும் அழைப்புகளுக்கான காத்திருப்பு நேரத்தை தற்போதுள்ள 20 நொடிகளில் இருந்து 10 நொடிகளாகக் குறைத்து, எவ்வித அழைப்பும் விடுபடாமல், உடனடியாக இணைப்பு பெற நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி\னார். மேலும், மின் தடை குறித்த ஒவ்வொரு புகாரும் உடனடியாக சரி செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட மின் பகிர்மான வட்டங்களில் இயங்கி வரும் மின்னகம் மூலமாகவும், புகார்தா ரரிடம் அலைபேசி மூலமாகவும் புகார் சரி செய்யப்பட்டதை உறுதி செய்த பின்னரே புகார்கள் முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைந்த சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 01.04.2025 முதல் 18.10.2025 வரை மொத்தமாக 11,87,000 சிறப்பு பராமரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவற்றுள் மாநிலம் முழுவதும் பழுதடைந்த மின் கம்பங்கள் 34,401 எண்ணிக்கை மாற்றப்பட்டுள்ளன. தாழ்வாக செல்லும் மின் கம்பிகள் 58,264 இடங்களில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. பழைய மின் பாதை கம்பிகள் 1,243 கி. மீ அளவிற்கு புதிதாக மாற்றப்பட்டுள்ளது. துணை மின் நிலையத்தில் 2464 முறை மின் பராமரிப்பு பணிகள் நடை பெற்றுள்ளது.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் இதுவரை 2,303 பில்லர் பாக்ஸ்கள் தரைமட்டத்திலிருந்து ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. கடந்த 4 ஆண்டுகளில் இதுவரை 9,544 பில்லர் பெட்டிகள் உயர்த்தப்பட்டுள்ளதாகவும், மழைக்காலத்திற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாக ஆபத்தான நிலையில் பூமிக்கு வெளியில் புதைவட கம்பி இணைப்புகள் சுமார் 3,418 எண்ணிக்கை சரி செய்யப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்காக 11,435 மின்மாற்றிகள், 3,30,636 மின் கம்பங்கள் மற்றும் 8,515 கி.மீ. மின் கம்பிகள், 1,471 கி. மீ. அளவில் புதைவட கம்பிகள், மற்றும் 3,41,015 மின் அளவிகள் உட்பட அனைத்து தளவாட பொருட்களும் கையிருப்பில் உள்ளது.

ஒவ்வொரு மின் பகிர்மான வட்டத்திற்கும் செயற்பொறியாளர் / பொது அவர்கள் சிறப்பு அலுவல் அதிகாரியாக நியமிக்கப்பட்டு ள்ளனர்.

இவரின் தலைமையின் கீழ், அந்த மின் பகிர்மான வட்டத்தில் கோட்ட அளவில் 15 பேர் அடங்கிய இரண்டு பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம், தமிழ்நாடு அளவில், அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள் உட்பட 5580 பேர் பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் உள்ளனர். மேலும், மிக உயர் அழுத்தப்பாதைகள் மற்றும் மின் கோபுரங்கள் மற்றும் வழித்தடங்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 79 குழுக்கள் தயார் நிலையில் உள்ளன.

பேரிடர் காலங்களில் ஈடுபடும் பணியாளர்கள் தங்குவதற்கு உரிய பள்ளிகள்,

திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் அடையாளம் காணப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

துணை மின் நிலைய ங்களில் டீசல் ஜெனரேட்டர், நீர் வெளியேற்றும் மின் மோட்டார்கள் மற்றும் மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப் பட வேண்டும்.

வாரிய வாகனங்கள் அனைத்தும் செப்பனிடப்பட்டு எரிபொருள் நிரப்பப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

மின் தடங்கல் ஏற்படின் முதற்கட்டமாக மருத்துவமனைகள், குடிநீர் இணைப்புகள், அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் செல்போன் டவர்கள் அனைத்திற்கும் முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

காற்றுடன் கூடிய மழையின் போது மிகத் தாழ்வான நிலையில் செல்லும்

மேல்நிலை மின் கம்பிகள் அறுந்து விழுவதை தடுக்க உரிய நடவடிக்கையினை போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும்.

இது போன்ற மழைக் காலங்களில் உயர் அலுவலர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினருடனும், தீயணைப்பு துறையினருடனும் எப்பொழுதும் தொடர்பில் இருக்க வேண்டும்.

அனைத்து அலுவலர்களும் தமது அலைபேசியை எந்தக் காரணம் கொண்டும் OFF செய்து வைக்கக்கூடாது எனவும், இதனை மீறுபவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

**பொதுமக்களுக்கான பொதுவான பாதுகாப்பு அறிவுரைகள்:**

மின் கம்பிகள் அறுந்து கிடக்கும் பகுதிகள், மின்சார கேபிள்கள், மின்சார கம்பங்கள், பில்லர் பாக்ஸ் (Pillar Box) மற்றும் டிரான்ஸ்பார்மர்கள் இருக்கும் பகுதிகளுக்கு அருகில் செல்வது தவிர்க்கப்பட வேண்டும்.

சாலைகளிலும், தெருக்களிலும் மின்கம்பங்கள் மற்றும் மின் சாதனங்களுக்கருகே தேங்கிக்கிடக்கும் தண்ணீரில் நடப்பதோ, ஓடுவதோ, விளையாடுவதோ மற்றும் வாகனத்தில் செல்வதோ தவிர்க்கப்பட வேண்டும்.

தாழ்வாக தொங்கிக் கொண்டிருக்கும் மின்சார ஒயர்கள் அருகில் செல்வதையும், தொடுவதையும் தவிர்க்க வேண்டும்.

ஈரமான கைகளால் மின் சுவிட்சுகள், மின்சார சாதனங்களை இயக்க முயற்சிக்க வேண்டாம்.

வீடுகள் மற்றும் கட்டடங்களில் உள்ள ஈரப்பதமான சுவர்களில் கை வைப்பதை தவிர்க்க வேண்டும்.

மின்சார கம்பத்திலோ அல்லது அதற்காக போடப்பட்டுள்ள ஸ்டே வயரின் (stay wire) மீதோ கொடி கயிறு கட்டி துணி காய வைக்க வேண்டாம்.

மின் கம்பத்திலோ அல்லது அவற்றை தாங்கும் கம்பங்களிலோ கால்நடைகளை கட்டி வைக்க வேண்டாம்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், மாநிலம் முழுவதும் மின்சார வாரியம் விரிவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மின் சேவை தடைகள் ஏற்படாதவாறு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அனைத்து பணியாளர்களும் பாதுகாப்புடன் விழிப்புடன் செயல்பட வேண்டும் என அமைச்சர் சா.கி. சிவசங்கர் தெரி வித்தார்.

மின் சேவைகள் மற்றும் மின் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 94987 94987 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 242 வது நாள்!

## எழும்பூர் வடக்குப் பகுதியில் வழங்கப்பட்டது!

சென்னை, அக்.22-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 242 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு 19.10.2025 அன்று எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 77 அ, மோதிலால் தெரு, புளியந்தோப்பு. 2) வட்டம் 78அ, அஷ்டபுஜம் ரோடு, சூளை, சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்



களின் வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப் பட்டது .

இந்நிகழ்ச்சியில் சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: B.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி. அபாய், தி.தயாளன், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: S.முரளி, R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### விழா காலத்தை யொட்டி சென்னையிலிருந்து

# 18 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்குப் பயணம்!

## பேருந்தில் மட்டுமே 6 லட்சம் பேர் சென்றனர்!

சென்னை, அக்.22-

நாடு முழுவதும் இன்று தீபஒளி கொண்டாடப்படுகிறது. இதற்காக சென்னையில் இருந்து இதுவரை 18 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்கு திரும்பி உள்ளனர்.

தீபஒளி பண்டிகையை முன்னிட்டு சென்னை மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு பெருமளவில் பயணம் மேற்கொண்டு வருகிறார்கள். இதனால், கடந்த சில நாட்களாக சென்னை நகரின் முக்கிய சாலைகள் மற்றும் போக்குவரத்து நிலையங்கள் மக்கள் கூட்டத்தால் அலைமோதின. குறிப்பாக, அரசு போக்குவரத்து துறை மற்றும் தெற்கு ரயில்வே ஆகியவை மக்கள் நெரிசலை சமாளிக்க சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தன.

இதன் ஒரு பகுதியாக, கடந்த மூன்று நாட்களில் மட்டும் பேருந்து மூலம் 6,15,992 பயணிகள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளனர் என்பது அதிகாரப்பூர்வ தகவலாக வெளியாகியுள்ளது. அதிலும் குறிப்பாக, அக்டோபர் 18 ஆம் தேதி மட்டும் 2,56,152 பயணிகள் சென்னையில் இருந்து பேருந்து மூலம் தங்கள் சொந்த ஊர்களுக்கு பயணித்துள்ளனர்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் அக்.22-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

நாளை (23.10.2025 - வியாழக்கிழமை) காலை 10:00 மணியளவில் கும்பகோணம், தஞ்சை வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.



அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டத்தின் பொருள்:

1.வரும் 28.10.2025 செவ்வாய்க்கிழமை, மாமல்லபுரம், ஈ.சி.ஆர். சாலையில் உள்ள "கான்ஃப்ளுயன்ஸ் ஹால்" (Confluence Hall)ல் நடைபெறவுள்ள தமிழ்நாடு தலைகுனியாது "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து.

2. துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா.

3. SIR (Special Intensive Revision) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு வர உள்ளதால் இல்லம் தோறும் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து.

4. கழக ஆக்கப் பணிகள்.

குறிப்பு: ஒன்றிய பகுதி பேரூர் கழக செயலாளர் கூட்டத்திற்கு வரும்போது ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை படிவம் மற்றும் BLA2 & BLC புத்தகத்தை மாவட்ட கழகத்தின் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதி 55,55அ,55ஆ ஆகிய வட்டத்திற்கு உட்பட்ட பொதுமக்கள் 2100 பேருக்கு விழாகாலத்தை முன்னிட்டு இனிப்பு மற்றும் பரிசுத்தொகையை அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழங்கினார். இவ்விழாவில் பகுதி கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, எம்.விஜயகுமார், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், பா.பிரதீப் குமார் மற்றும் கழக முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி ஒன்றியம் கூடமலை ஊராட்சியில் பணிபுரியும் தூய்மைப்பணியாளர்களுக்கு பண்டிகையை முன்னிட்டு புத்தாடை மற்றும் இனிப்புகளை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான கு.சின்னதுரை வழங்கினார். அப்போது தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.